**<u>மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயம்,</u>**
**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயர்,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாள் சனிக்கிழமை**

**<u>இ.ம.எண்.1/2025 மற்றும் 2/2025 ன் எம்.சி.ஓ.பி. எண்.305/2015</u>**

திரு. M. சரத்குமார்

... மனுதாரர்

..எதிர்..

1. திரு. D. தாமஸ்

2. யூனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

எண்.73, CMTH சாலை, அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

... எதிர்மனுதாரர்கள்

இம்மனுக்கள் 06.08.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. V. சத்தியாஸ்ரீ அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் திரு. V. ஏகாம்பரம் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும்,

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:15 +0530

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு மற்றும் 2வது எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**பொதுவான உத்தரவு**

இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 18 விதி 17ன் கீழ் அசல் எம்.சி.ஓ.பி–ல் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்கவும் மற்றும் ம.சா.1 ஐ மீண்டும் அழைக்கவும் அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **இரு மனுக்களிலும் மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

இம்மனுக்களின் மனுதாரர் எம்.சி.ஓ.பி. மனுவில் மனுதாரர் ஆவர். எம்.சி.ஓ.பி 24.06.2015 அன்று நடந்த மோட்டார் வாகன விபத்துக்கான இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டது. 21.12.2022 அன்று, மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அந்த மனு இயலாமை காரணமாக (dismissed for default) தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரரின் தாயார் கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், மனுதாரர்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:22 +0530

அவரைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவரது உடல்நலக்குறைவு காரணமாக, மனுதாரரால் நீதிமன்றத்தில் தவறாமல் வரவோ அல்லது வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளவோ முடியவில்லை. மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக, அந்த நாளில் நீதிமன்றத்தில் அவர் ஆஜராக முடியவில்லை. அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தியிருந்த போதும், அவர் அவ்வாறு செய்யத் தவறியதால், வழக்கு அழைக்கப்பட்டு இயலாமை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர், மனுதாரர் தாமதத்தை மன்னிக்கும் மனுவுடன், மீட்டெடுப்பு மனுவை (restoration petition) தாக்கல் செய்தார், இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, வழக்கு 2 வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்களுக்காக வைக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ஊனமானவர் சான்றிதழ் (disability certificate) குறிக்கப்படவில்லை என்பதை மனுதாரர் இப்போது தான் தனது வழக்கறிஞர் மூலம் அறிந்துகொண்டார். எனவே, மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்கவும் மற்றும் மனுதாரரை மீண்டும் அழைக்கவும் அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:29 +0530

**3. இரு மனுக்களிலும் 2 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-**

மனுக்களில் உள்ள அனைத்து குற்றச்சாட்டுகள் குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. மருத்துவ சான்றிதழ் குறிக்கப்படவில்லை என்பதை இப்போது தான் மனுதாரர் அறிந்ததாக கூறப்பட்ட காரணம் தவறானது. வழக்கு 07.03.2018 அன்றே மேலதிக மனுதாரர் தரப்பு சாட்சிக்காக வைக்கப்பட்டது. மருத்துவக் குழு அறிக்கை பெறப்பட்டதாக தெரிகிறது. மனுதாரர் 07.03.2018 க்குப் பிறகு எந்த முன்னேற்பாடும் இன்றி வழக்கை தாமதப்படுத்தியுள்ளார். எம்.சி.ஓ.பி மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் நிலையில், 07.03.2018 க்குப் பிறகு வழங்கப்படும் எந்த இழப்பீட்டுத் தொகைக்கும் மனுதாரர் வட்டி பெற தகுதியற்றவர் என தெளிவுபடுத்தப்பட வேண்டும். எனவே இம்மனுக்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-**

இந்த மனுக்கள் மனுதாரரால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:34 +0530

**5.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. **பிரச்சனை:–**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் எம்.சி.ஓ.பி. மனுவில் மனுதாரர் ஆவார். எம்.சி.ஓ.பி. மனுவானது மனுதாரர் 24.06.2015 அன்று மோட்டார் வாகன விபத்தில் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீட்டுப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு 21.12.2022 அன்று, மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அந்த மனு (dismissed for default) தள்ளுபடி செய்யப்பட்டு பின்னர், மனுதாரர் தாமதத்தை மன்னிக்கும் மனுவுடன், மீட்டெடுப்பு மனுவை (restoration petition) தாக்கல் செய்து, அந்த மனுக்கள் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, வழக்கு 2 வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டதாகவும் மனுதாரர் தரப்பில் ஊனமானவர் சான்றிதழ் (disability certificate) குறிக்கப்படவில்லை என்பதை மனுதாரர் இப்போது தான் தனது வழக்கறிஞர் மூலம் அறிந்துகொண்டார் என்றும் எனவே, மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்கவும மற்றும் மனுதாரரை மீண்டும் அழைக்க அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:39 +0530

தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில், மறுத்துரைக்கப்பட்டு மனுதாரர் 07.03.2018 க்குப் பிறகு எந்த முன்னேற்பாடும் இன்றி வழக்கை தாமதப்படுத்தியுள்ளதாகவும் எம்.சி.ஓ.பி மனுவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் நிலையில், 07.03.2018 க்குப் பிறகு வழங்கப்படும் எந்த இழப்பீட்டுத் தொகைக்கும் மனுதாரர் வட்டி பெற தகுதியற்றவர் என தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் எனவே இம்மனுக்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டு உள்ள போதிலும் மனுதாரர் எம்.சி.ஓ.பி.யில் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்கவும் மற்றும் அழைக்கவும் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கவையாக அமைந்துள்ள நிலையில் மோட்டார் வாகன இழப்பீட்டு மனுவை (எம்.சி.ஓ.பி.) முழுமையான தீர்வு காணும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் இம்மனுக்களை அனுமதிப்பது என்றும் மேலும் மனுதாரரின் தவறுகையால் தாமதமான காலத்திற்கு மனுதாரருக்கு வட்டி வழங்கப்படாது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:44 +0530

முடிவில், இம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:48 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.28 20:31:52 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு உத்தரவு**
**பொதுவான உத்தரவு**
**இ.ம.எண்.1 மற்றும் 2/2025 ன்**
**எம்.சி.ஓ.பி. எண்.305/2015**
**நாள் 25.10.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**